**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2021**

யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் 2017 திசெம்பர் 15 ஆெம் திகதிய 3603 - எஸ்ஆர்ஜ மற்றும் 3604 - எஸ்ஆர்ஜ (மேலதிக நிதியளிப்பு ஆம் கடன் உடன்படிக்கைகளின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை, வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வட மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரிடமிருந்தான கடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது, ஏனென்றால், சுத்திகரிப்பு பொறிக்கு இரணைமடு குளத்திலிருந்து தண்ணீர் வளம் போதாமையால் செயற்திட்ட நோக்கெல்லை மீளமைக்கப்படுகின்றது. ஆகவே, 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 18,24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,016 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் திரண்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2711 ஆம் இலக்க கடன் கைதவிர்ப்புகள் ரூபா 7,811.45 மில்லியனாக இருந்ததுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றுக்களின் பிரகாரம் நேரொத்த தொகை ரூபா 9,512.01 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,700.56 மில்லியன் வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கணக்கேடுகளில் கணக்கீடு செய்யப்பட்ட செலவினங்களிற்கும் நுசுனு னுசுஆளு-814 அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட செலவினங்களிற்கும் இடையிலான வித்தியாசங்களிற்கான நாட்குறிப்பேட்டு பதிவுகளை அனுமதிப்பதற்கு செயற்திட்டமானது இரண்டு செலவினங்களையும் சமப்படுத்துவதற்கு ஒரு விரிவான இணக்கக்கூற்று தயாரித்திருந்தது. | செயற்திட்டமானது ஆண்டின் போதான கைதவிர்ப்பு வித்தியாசத்தை மாத்திரம் இணக்கம் செய்திருந்தது. எவ்வாறாயினும் மொத்த வித்தியாசத்தையும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா. 11,033.72 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 13,344.01 மில்லியனாக இருந்தது. செயற்திட்டமானது ரூபா 811.05 மில்லியன் இணக்கம் செய்யப்படாத மீதி இனங்காண்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் வித்தியாசத்தை திருத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை இனங்காண்பதன் மூலம் செயற்திட்டமானது ஒவ்வொரு ஆண்டியதும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினுடைய மீதிகள் மற்றும் செயற்திட்டம் இரண்டினதும் மீதிகளை சமப்படுத்துவதற்கு நடைபெறும் வேலைகளின் விரிவான இணக்கக்கூற்று தயாரித்து சமர்ப்பித்திருந்தது. | ரூபா 811.05 மில்லியன் இணக்கம் செய்யப்படாத மீதியை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| | நடவடிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பாரக்கப்பட்டது | உள்ளபடியானது | | |
| (அ) | யாழ்ப்பாண நகரப் பகுதியில் விநியோக வலையமைப்பு குழாயிடல் | 283 கிமீ | 47 கிமீ | யாழ்ப்பாண நகரப் பகுதியில் விநியோக வலையமைப்பு ஒப்பந்தம் 2021 மே 03 இல் தொடங்கப்பட்டது. பழைய பூங்காவில் முஜஊ கட்டிடத்தின் நிர்மாணம் இந்த ஒப்பந்தத்தின் கீழ் 95 சதவீம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் 12 கிமீ குழாயிடல் 2022 மே 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் ஊஐனுயு விலை குறிகாட்டிகளின் எதிர்பாராத அதிகரிப்பு என்பன ஒப்பந்த முன்னேற்றங்களை பாதிக்கின்றன. | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் | 50 கிமீ | கேள்வி ஆவணம் தயாரிக்கப்பட்டது. | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்திற்கான கேள்விகோரல் ஞுறுசுழு பொறி வழங்கல் மற்றும் ஒப்பந்தம் வழங்கலிற்கான நிதி கிடைப்பனவை உறுதி செய்யயும் நோக்கில் ஆருநு ஞுஊயுனுயு நிர்மாணம் என்பவற்றின் பின்னர் விளம்பரப்படுத்துவதற்கு யுனுடீ தீர்மானிதிருந்தது. எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் நிலைமைகளால், செயற்பாட்டிலுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் மாப்பாய்விலுள்ள ஒப்பந்தங்களிற்காக சகல | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பிடப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கிரயங்களும் பாரதூமாக அதிகரித்திருந்ததுடன் துமுறுளுளீ நோக்கெல்லையின் கீழ் இந்தச் செயற்திட்டத்தை உள்ளடக்குவதற்கு சாத்தியமற்றிருந்தது. | |
| (இ) | கடல் நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் | ஒப்பந்தமானது 2021 ஒக்தோபரில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது. | ஒப்பந்தமானது 2021 சனவரியில் வழங்கப்பட்டது. | மதிப்பாய்வு மற்றும் அனுமதி நடைமுறைகளால் ளுறுசுழு பொறி ஒப்பந்தம் வழங்கலில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் இருந்தது. இறுதியாக ளுறுசுழு ஒப்பந்தம் 2021 சனவரி 25 இல் ஆ.ஃ.ளு ளுரநண ஐவெநசயெவழையெட இற்கு வழங்கப்பட்டதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆ.ஃ.ளு ளுரநண ஐவெநசயெவழையெட இற்கும் இடையில் 2021 பெப்ரவரி 23 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் 2021 மார்ச் 05 இல் வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அரசாங்கம் செயற்திட்டத்தின் நிதிகள் பயன்படுத்தலிலுள்ள தாமதங்களால் கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் கடன் திருப்பிச் செலுத்தல்கள் 2017 இல் தொடங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவருக்கு திருப்பிச் செலுத்தல்களாக ரூபா 1,569.05 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கியானது வட்டிக் கட்டணங்கள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்கின்றதுடன் கடன் முதல் தொகை திருப்பிச் செலுத்த வேண்டும். | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளும் ஆறு மாதங்களும் கடந்த பின்னரும் செயற்திட்டமானது கடன் இல. 3603 ஆம் இலக்க கடனின் கீழ் நிதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. ஆகவே, கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்கு எதிராக கடனளிக்கும் முகவரால் 2021 யூன் 30 வரை ரூபா 84.32 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள்சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | டு3603 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐை ஆம் உறுப்புரைக்கமைய, கடன்பெறுவோர் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களை செலுத்த வேண்டியதுடன் கடன் முதலையும் திருப்பிச் செலுத்த வேண்டும். இதனுடன் இணங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களை சாட்டுதல் செய்கின்றதுடன் வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தின் அந்த விபரங்கள் அறிக்கையிடுகின்றது. | நிறைவேற்றல் முகவர் கடப்பாட்டு கட்டணங்களை குறைத்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வேண்டப்பட்டது. (ஏனென்றால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் உடன்படாமையால் கொள்வனவில் தாமதம் ஏற்பட்டது.) |
| (இ) | 2017 திசெம்பர் முதல் 2021 யூன் 22 வரை 3603 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருக்காத போதிலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்று 2021 மே 15 வரை ரூபா 2.41 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்களை காட்டியிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டமானது கொடையளிக்கும் முகவருடன் இந்த விடயத்தினை திருந்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாங்கள் மாவட்டங்களில் இலக்கிடப்பட்ட நலனாளிகளிற்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு 2023 செப்தெம்பர் இறுதியளவில் பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு ஒப்பந்தத்தை விரைவாக வழங்கும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எங்களுடைய சிறந்த முயற்சியை எடுத்திருந்தோம். | ஆசிய அபிவிருத்தி வங்கியானது வட்டிக் கட்டணங்களை மூலதனமாக்கியிருந்ததுடன் கடன் கைவிர்ப்புகளாக பதிந்திருந்தது. மேலும், அவர்கள் அந்த மூலதனமாக்கப்பட்ட தொகை மீது வட்டியை சாட்டுதல் செய்திருந்தனர். ஆகவே, நிறைவேற்றல் முகவர் அந்த விடயம் தொடர்பில் கொடையளிக்கும் முகவருடன் கலந்துரையாட வேண்டும். |

### 3.3 முரணான நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது நம்பகமான மின்சார வழங்கல் முன்னேற்ற ஆதாரவுச் செயற்திட்டத்தால் நயினாதீவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஞறுசுழு பொறியின் திறத்தல் தொடர்பில் பத்திரிகை விளப்பரத்திற்காக இலங்கை அரசாங்க நிதிகளிலிருந்து ரூபா 1.11 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. | செயற்திட்ட விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூபா 1,112,112 செலுத்துவதற்கு துமுறுளுஞீ இற்கு நிதிப் பிரிவு நிதிகளை விடுவித்திருந்தது. இதன்படி, இது செலுத்தப்பட்டது. | செயற்திட்டமானது வினைத்திறனாகவு, ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனமாக செலவினங்களை முகாமை செய்ய வேண்டும். |

### 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு 2018 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தினுடைய தொழில்நுட்ப மற்றும் நிதி கணக்காய்வை மேற்கொண்டிருந்தது. 2021 பெப்ரவரியில் அதனை கணக்காய்வு செய்வதற்காக உள்ளக கணக்காய்வு பிரிவு துமுறுளுஞீ இற்கு வருகை தருவதற்கு திட்டமிட்டிருந்தது. ஏனென்றால், மாகாணங்களிற்கு இடையில் பயணத்தடை விதித்தமை உள்ளடங்கலாக நாட்டில் கோவிட் 19 நோய் தொற்று நிலைமை என்பவற்றால் அவர்கள் துமுறுளுஞீ இற்கு வருகை தர இயலாதிருந்தது. | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் திருத்திய நோக்கெல்லையின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தில் நீர் வழங்கும் நோக்கில், கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி பொருத்துவதையும் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்தையும் 2022 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற குழாய்கள் பொருத்துதல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கீழான அந்த சகல பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகளும் முறையான தண்ணீர் வளம் கிடைக்காமையால் பயனற்றிருந்தது. | பூநகரி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் உயர்த்தப்பட்ட கோபுரங்கள் இருக்கின்ற வரையறுத்த தண்ணீர் வளங்களுடன் நலனாளிகளிற்கு நீர் வழங்குவதற்கு இணைக்கப்பட்டிருந்த. மேலும், 950 வீட்டு இணைப்புகள் பூநகரி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளிற்கு தண்ணீர் வழங்கலை மேற்கொள்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு பிரிவு மூலம் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களிற்காக செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்திட்டத்தின் கீழ் பல்வேறு நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், உரிய காணிகளின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றிப் பெறப்பட்டிருக்கவில்லை. | காணிச் சுவீகரிப்பு நடைமுறைக் காலப்பகுதி மற்றும் குத்தகை நடைமுறையின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காணி உரிமையாண்மையை மாற்றிப் பெறுவதில் தாமதம் எடுக்கின்றது. | காணிகளின் உரிமையாண்மை மாற்றிப் பெறுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |